

மதுரையில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான இ. பி.செந்தில்குமார் தனது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## செஞ்சி பேரூராட்சியில் பணிபுரியும்

# தூய்மைப் பணியாளர்களுக்கு பரிசுத் தொகுப்பு!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வழங்கினார்!

செஞ்சி நவ.2- .

செஞ்சி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பரிசுத் தொகுப்பினை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவி குழுவினர்கள், அலுவலக பணியாளர்களுக்கு பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் தலைமை தாங்கினார். செயல் அலுவலர் அண்ணாதுரை அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவி குழுவினர்கள், அலுவலக பணியாளர்களுக்கு தீப ஒளி திருநாள் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல் மணி, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் ஜான் பாஷா, சங்கர், மகாலட்சுமி கமலநாதன், சிவக்குமார், அஞ்சலை நெடுஞ்செழியன், சுமித்ரா சங்கர், துப்புரவு ஆய்வாளர் பார்கவி, இளநிலை அலுவலர்கள் ஆனந்த ராம், பாலா சபரி ஸ்ரீ, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில்குமார், செந்தில் குமரன், மாவட்ட பிரதிநிதி காளி சுப்ரமணியன், தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தி.மு.க. சட்டத்துறை சார்பில் 27.10.2024 அன்று மாலை 5.00 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், சர் பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் திராவிட இயக்க சிந்தனையாளர் முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு மற்றும் புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., முன்னிலையில் கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திருவுருவ படத்தினை திறந்து வைத்தார். மூத்த வழக்கறிஞர் மாசிலாமணி மற்றும் ஓய்வு பெற்ற நீதியரசர் எஸ். பாஸ்கரன் அவர்களும் புகழஞ்சலி செலுத்தினர். கழக நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் பெருமளவில் இந்நிகழச்சியில் கலந்து கொண்டார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 27.10.2024 அன்று பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, திருவான்மியூர் மற்றும் வேளாங்கண்ணி கடற்கரைகளிலும் மரப்பலகையிலான அணுகு பாதை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தமைக்காக, நன்றி தெரிவித்து, இந்த மகிழ்ச்சியை கொண்டாட வேண்டும் என்று மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பினர் கோரிக்கை விடுத்ததையொட்டி, 30.10.2024 அன்று முகாம் அலுவலகத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களுடன் கலந்துரையாடினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 27.10.2024 அன்று பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, திருவான்மியூர் மற்றும் வேளாங்கண்ணி கடற்கரைகளிலும் மரப்பலகையிலான அணுகு பாதை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தமைக்காக, நன்றி தெரிவித்து, இந்த மகிழ்ச்சியை கொண்டாட வேண்டும் என்று மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பினர் கோரிக்கை விடுத்ததையொட்டி, 30.10.2024 அன்று முகாம் அலுவலகத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகள் நல அமைப்பினருக்கு, தேநீர் விருந்தும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வழங்கி கலந்துரையாடி, குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.

## மானாமதுரை சிப்காட்டில் விரைவில் தொழிற்சாலைகள்!

# சிவகங்கை மாவட்டம் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டமாக உருவாக்கப்படும்!

## தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!

சிவகங்கை, நவ.2-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் வளாகத்தில் தொழில் முனைவோர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன்,நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய கவுன்சிலர் எம்.அண்ணாதுரை முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் துரை.ராஜா மணி மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றிய குழுt துணைத்தலைவர் முத்து ச்சாமி உட்பட தொழில் முனைவோர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

இந்த கூட்டத்தில் தொழில் துறை அமைச்சர் டி. ஆர்.பி ராஜா பேசியதாவது:

தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் பதவி ஏற்ற 3அரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தொழில் துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக



அ.தி.மு.க.ஆட்சியில் தமிழகத்தில் எவ்வித தொழில் முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதை மூன்றரை ஆண்டுகளில் முதல்வர் அவர்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்து சீரமைத்து வருகிறார். சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை காநாடு காத்தான் மற்றும் பல்வேறு பகுதியில் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்று இந்த மாவட்ட அமைச்சர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் எம்.எல்.ஏ. தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் என்னை சந்திக்கும் போதெல்லாம் வலியுறுத்தி வந்தார்கள். சட்டமன்றத்திலும் கோரிக்கை வைத்து வந்தார்கள்.

இங்குள்ள சிப்காட் மிகவும் பழமை வாய்ந்தது . இங்கு தொழில்கள் ஏற்கனவே துவங்கப்பட்டு தற்பொழுது சற்றுதொய்வாக உள்ளது. அதை சீரமைக்கவும் புதிதாக தொழில்கள் தொட ங்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக முதல்வர் பதவியேற்று பத்து லட்சம் கோடிக்கு மேல் முதலீடுகள் வந்துள்ளது. ஆனால் நமது முதல்வர் துணை முதல்வர் ஆகியோர் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு இதன்மூலமாக கிடைத்தது என்று பார்க்கிறார்கள். முதல்வர் அவர்கள் துணை முதல்வர் ஆகியோர் தொழிற்சாலைகள் அந்தந்த பகுதியில் வேலைவாய்ப் பின்றி உள்ள இளைஞர்கள் குறிப்பாக பெண்களை வைத்து அவர்கள் திறமைக்குஏற்ப தொழிலை தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் அந்தந்த பகுதியில் வேலை வாய்ப்பு இளைஞர்கள் பட்டதாரி இளைஞர்கள் பெண்கள் ஆகியோர்களுக்கான தொழில்கள் துவங்குவது பற்றி ஆலோசனை நடைபெற்று வருகிறது .

அதன் பேரில்சிறிய தொழிற்சாலை கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தொழில் துவங்கிட அனைத்து வசதிகளை அரசாங்கம் செய்து தருகிறது . தமிழக முதல்வரின் ஒரு மில்லியன் டாலர் வளர்ச்சி என்பது தான் அவரது கனவாக உள்ளது. அதை நாம் நிறைவேற்ற வேண்டும். சிப்காட்டில் நான் அமைச்சராக பதவி ஏற்றபின் மாதம் தோறும் குறை கேட்கும் முகாம் நடைபெற்று வருகின்றது

**கலைஞர் தொடங்கிய திட்டம்!**

இதன் மூலம் தொழில் முனைவோர்களின் குறைகள் கேட்டு அந்த குறைகள் தீர்த்திட வாய்ப்பாக அமைகிறது. பொது மக்களை சந்தித்து இப்பகுதியில் என்னென்ன தேவை என்று தெரிந்து கொள்ள வாய்ப்பும் உள்ளது. முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் மானாமதுரை சிப்காட்டில் வீடியோ கான் தொழிற்சாலை துவங்கப்பட்டது.

தற்பொழுது செயல்படாமல் உள்ளது. அதே நிறுவனம் செயல்படவும் அல்லது வேறு நிறுவனத்தை வைத்து மீண்டும் செயல்படவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் ஏராளமான இளைஞர்கள் வேலை வாய்ப்புக்கு சென்றுள்ளார்கள். எனவே அந்தந்த பகுதியில் உள்ள தொழில் திறமை முனைவோரை கண்டுபிடித்து அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டும் என்பதே முதல்வரின் விருப்பம்ஆகும். இந்த அரசின் நோக்கமாக உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை.யில் விரைவில் பெண்கள் அதிக அளவில் பணிபுரிவதற் கான தொழிற்சாலை துவங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கானாடுகாத் தான் உட்பட மாவட்டத்தில் விரைவில் தொழிற்சாலை துவங்குவதற் கான நடவடிக்கைகள் முதல்வர் ஆலோசனை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாவட்டத்தில் தொழிற்சாலை நிறைந்த மாவட்டமாக உருவாக்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி ராஜா பேசினார்.



கோவை தடாகம் சாலை வேலாண்டிபாளையத்தில் தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி, வாழ்த்தி, சிறப்புரையாற்றினார். மாநகர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் சிவராமன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி. முருகன், வேலாண்டிபாளையம் பகுதி தி.மு.க. செயலாளர் எ.எம்.கிருஷ்ணராஜ்6, மைதிலி நடராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் சிவகுமார், பொன்ராஜ்,கழக நிர்வாகிகள், சத்யா, அருண் பிரசாத்,ஆர்.ஆர்.மோகன்குமார்,கேசவன், மகேஷ்வரன், சாந்தி,லதா மகேஷ்வரி, நாகராஜ் ரமேஷ், சுந்தர்ராஜன்,ஷியாம்சுந்தர், சாவித்திரி, வரதராஜ், நாகராஜ், லட்சுமணன், கருப்புசாமி, நடராஜ், புவனேஸ்வரி, முத்துப்பாண்டி, சத்யா, கண்ணன், நடராஜ்,கழக செயல்வீரர்கள், திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.

# சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, நவ. 2-

தருபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கான பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் வருகின்ற 04.11.2024 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் காரிமங்கலம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழகத் அவை தலைவர் கே.மனோகரன், தலைமையில், மாவட்ட



கழக துணைச் செயலாளர். ஆ.மணி எம்.பி., முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளரும், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன் அவர்களையும், மாநில அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளரும், அரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் சி.செல்லதுரையும், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எவரெஸ்ட்.என்.நரேஷ்குமார் அவர்களையும் அறிமுகப்படுத்த உள்ளார்கள்.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. வாக்காளர் சேர்த்தல் நீக்கல்

2. வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) மற்றும் வாக்குச்சாவடி குழு(BLC) சரிபார்த்தல்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கேரள மாநிலம் வருகை தரும்

# துணை முதல்வருக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு!

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் வேண்டுகோள்!

திருவனந்தபுரம், நவ. 2-

கேரள மாநிலம் தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு அரசின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (2.11.2024 வெள்ளிக் கிழமை) காலை 10 மணியளவில் தனி விமானம் மூலம் கோழிக்கோடு கருப்பூர் விமான நிலையம் வருகிறார். அன்று முற்பகல் கோழிக்கோடு கடற்கரை அருகில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மதியம் 2 மணியளவில் கோழிக்கோடு கருப்பூர் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்னை சென்றடைகிறார். தமிழ்நாடு அரசின் துணை முதல்வராக பதவி ஏற்ற பின் முதல் முறையாக கேரள மாநிலம் வரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கேரள மாநில தி.மு.க. சார்பில் மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் (எனது) தலைமையில் மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் சிற்றார் ரவிச்சந்திரன், மாவட்ட கழக செயலாளர்கள் போபன்.கே. பேபி, சாஜிதா,பூவாது, அனீஷ் ,ஜாபர், முஜிபுர் ரகுமான், ரெஜிராஜ், ஆதவன், சதாசிவம், இலியாஸ், மன்னன் ஆகியோர் முன்



னிலையில் காலை விமான நிலையம் வரும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மறமடக்கி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி உரையாற்றினார்.